ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2049/24 – 2017 දෙසැම්බර් 13 වැනි බදාදා – 2017.12.13
*2049/24 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், எலபாத்த பிரதேச செயலாளர் பிரிவில், பல்லே பத்துவை சிறுபிரிவில், அமுவல (மு.கி.ப. 81) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2016.08.12 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபடத்தில் இல. ஆர்/ஈஎல்பி/2016/300 இல் குறிப்பிடப்பட்ட 0.0086 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் எல்லைகள் :

01. **துண்டு 'ஏ' - முருத்தகஹஹேன - விஸ்தீரணம் : 0.0086 ஹெக்டயார்**
வடக்கு: அக்குரட்டிய கமகே சந்திரசேன உரிமை கோரும் முருத்தகஹஹேன காணி ; கிழக்கு: அக்குரட்டிய கமகே சந்திரசேன உரிமை கோரும் முருத்தகஹஹேன காணி மற்றும் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் அமைந்துள்ள முருத்தகஹஹேன ; தெற்கு: சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் அமைந்துள்ள முருத்தகஹஹேன மற்றும் பாதை (பிரதேச சபை); மேற்கு: பாதை (பிரதேச சபை) மற்றும் அக்குரட்டிய கமகே சந்திரசேன உரிமை கோரும் முருத்தகஹஹேன காணி .

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இல.: 4/3/8/2015/பீசீ/272.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2017, ஒற்றோபர் 26.

12-987